**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE(MACT),KRISHNAGIRI.**

**M.C.O.P.NO: 202/17**

**Deposition of witness of Petitioner/Respondent**

**Solemnly affirmed sworns by Assistant on 26-07-2018**

**Accordance with the provisions with the Act of 1873.**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: மாதவன்** | **Father's Name:** | |
| **Village** | **:** | **Taluk:** | |
| **Caste** | **:** | **Calling:** | |
| **Religion** | **:** | **Age:** | |

ம.சா.2
மு.வி.
நான் தற்போது பாலக்கோடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சி அளிக்க வந்துள்ளேன். எங்கள் காவல் நிலைய குற்ற எண் 320/16 சி.டி கோப்பை முன்னிலைபடுத்தி சாட்சி அளிக்கும் படி பணிக்கபட்டிருந்தேன். அந்த அசல் சி.டி. கோப்பை கொண்டு வந்துள்ளேன். அது இ.த.சா. பிரிவு 277 மற்றும் 337 ன் கீழ் பதிவு செய்யபட்டது. அதில் டி.என்.70 கே8977 பதிவெண்கொண்ட மகேந்திரா பொலிரோ வாகன ஓட்டுனர் சதீஷ், த/பெ வெங்கடேஷ் என்பவர் குற்றம் சாட்டபட்டுள்ளர். சம்பவத்தில் தொடர்புடைய மேற்படி பொலிரோ வாகனத்தை நாங்கள் கைபற்றி அந்த வாகனத்தின் ஆவணங்களை பெற்று பரிசீலனை செய்தோம். அந்த வண்டியின் காப்பீடு பாலிசி நகல் மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவை சி.டி கோப்பில் உள்ளன. அந்த காப்பீடு பாலிசியின் உண்மை நகல் ம.சா.ஆ.7. மேலும் அந்த வண்டியை பொருத்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.சா.ஆ.8. சம்பவம் தொடர்பாக மேற்படி சதீஷ் என்பவர் மீது பாலக்கோடு குற்றவியல் நீதிதுறை நடுவர் மன்றத்தில் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யபட்டு அது எஸ்டி.சி. 730/17 என கோப்பிற்கு எடுக்கபட்டது. அந்த வழக்கில் எதிரி ஆஜராகி குற்றத்தை ஒப்பு கொண்டு 7-7-2017 அன்று மொத்தம் ரூ.2,000/- அபராதம் செலுத்தினார். அதுபற்றிய குறிப்பு வழக்கு டைரியில் உள்ளது. மேலும் அதற்கான சிலிப் புரொசிடிங்ஸ் கோப்பில் உள்ளது. அதன் உண்மை நகல் ம.சா.ஆ.9.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:
நான் 2014 ஆண்டில் இருந்து இந்த காவல் நிலையத்தில் பணிபுரிகிறேன். சம்பவ வழக்கு தொடர்பாக நான் புலன் விசாரணை செய்யவில்லை. எஸ்ஐ. திரு.கேசவன் தான் புலன் விசாரணை செய்தார். நான் கோப்பின் அடிப்படையில் தான் சாட்சி அளிக்கிறேன். பொலிரோ வாகன உரிமையாளர் காவல் நிலையத்தில் கொடுத்த வாகன காப்பீடு பாலிசியின் நகல் தான் சி.டி

கோப்பில் உள்ளது என்றால் சரிதான். அந்த காப்பீடு பாலிசியின் உண்மை தன்மையை அறிய புலன் விசாரணை அதிகாரி அந்த காப்பீட்டு நிறுவனத்திற்கு கடிதம் எழுதியதாக கோப்பில் ஆதாரம் இல்லை. புலன் விசாரணை அதிகாரி அந்த காப்பீடு நிறுவனத்தினரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வாகன உரிமையாளர் கொடுத்த காப்பீடு பாலிசியின் அடிப்படையில் தான் மோட்டார் வாகன ஆய்வாளர் தமது அறிக்கையில் விவரத்தை குறிப்பிட்டிருப்பார் என்றால் சரிதான். பொலிரோ வாகனம் இலகுரக சரக்கு வாகனம் என ம.சா.ஆ.8ல் குறிப்பிடபட்டுள்ளது. அது போக்குவரத்து வாகனம் என்றால் சரிதான். அந்த வகையான வாகனத்தை ஓட்டுவதற்கு பொது பணிவில்லை பெற்றிருக்க வேண்டும் என்றால் சரிதான். குற்றம் சாட்டபட்ட சதீஷின் ஓட்டுனர் உரிம நகல் சி.டி கோப்பில் உள்ளது. அதன் உண்மை நகல் எ.ம.சா.ஆ.1. அவர் போக்குவரத்து வாகனத்திற்கான பொது பணி வில்லை பெற்றதாக அதில் குறிப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவ விபத்தில் டி.என்29ஏ.ஜே8003 பதிவெண்கொண்ட எமாகா இருசக்கர வாகனமும் சம்மந்தபட்டிருந்தது. அந்த வாகனத்தை பொருத்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையும் கோப்பில் உள்ளது. அதன் உண்மை நகல் எ.ம.சா.ஆ.2. அந்த வண்டியின் காப்பீடு பாலிசி மற்றும் ஓட்டுனின் ஓட்டனர் உரிமம் ஆகியவை ஆய்வின் போது முன்னிலைபடுத்தபடவில்லை என்று குறிப்பிடபட்டுள்ளது. அந்த வண்டியை கண்ணப்பன் மகன் தேவன் என்பவர் ஓட்டியதாக அதில் குறிப்பிடபட்டுள்ளது. மேற்படி தேவன் என்ற நபரின் ஓட்டுனர் உரிம நகல் சி.டி கோப்பில் இல்லை. வாகன உரிமையாளர் கொடுத்த காப்பீடு பாலிசி பற்றி சம்மந்தபட்ட நிறுவனத்திடம் விசாரணை செய்யாமல் அதன் உண்மை தன்மை பற்றி என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான்.

அனுமதியுடன் மறு விசாரணை:

டி.என்.70 கே8977 பதிவெண்கொண்ட மகேந்திரா பொலிரோ வாகனத்தின் உரிமையாளரால் சமர்பிக்கபட்ட காப்பீடு பாலிசி உண்மையானது அல்ல என்று குறிப்பிட்டு நாளது வரை யாரும் புகார் கொடுக்கவில்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

அந்த காப்பீடு நிறுவனம் மேற்படி வாகன ஓட்டுனர் மற்றும் உரிமையாளர் மீது சி.பி.சி.ஐ.டி அல்லது கோவை மாநகர காவல் துறை கண்காணிப்பாளர் வழக்கு போட்டு விசாரணை செய்திருந்தால் அது பற்றி எங்களுக்கு தெரிய வராது என்றால் சரிதான்.

சிறப்பு சார்பு நீதிபதி(MACT)
கிருஷ்ணகிரி.